**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 518** **நாள்: 27.09.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தினை நாளை (28.09.2026) மதுரையில் தொடங்கி வைப்பதைத் தொடர்ந்து,**

**நாளை (28.09.2026) சென்னை மாவட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட நான்கு அரசு மருத்துவமனைகளில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் 22.06.2026 முதல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தினை நாளை (28.09.2026) மதுரையில் தொடங்கி வைப்பதைத் தொடர்ந்து, நாளை (28.09.2026) சென்னை மாவட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நான்கு அரசு மருத்துவமனைகளில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் 22.06.2026 முதல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 22.06.2026 முதல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனை, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை, திருவல்லிக்கேணி கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை ஆகிய நான்கு மருத்துவமனைகளில் நாளை (28.09.2026) தொடங்கி வைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 22.06.2026 அன்று முதல் அரசு மருத்துவமனைகள், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் 16 நகர்ப்புற சமுதாய சுகாதார மையங்கள் மற்றும் 3 மகப்பேறு மருத்துவமனைகளில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

தினமும் 200 முதல் 300 வரை குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற உள்ளது. 22.06.2026 முதல் 27.06.2026 வரை பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் அக்டோபர் மாத இறுதிக்குள் தங்க மோதிரம் வழங்கப்பட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்கண்ட கால கட்டத்தில் பிறந்த குழந்தைகளின் தாய்மார்களுக்கு தங்க மோதிரம் பெற்றுக் கொள்ள அழைப்பிதழ்கள் வழங்கப்படும். அழைப்பிதழில் குறிப்பிட்டுள்ள நாளில் குறிப்பிட்டுள்ள மருத்துவமனையில் வைத்து தங்க மோதிரம் வழங்கப்படும்.

28.06.2026 முதல் பிறக்கும் குழந்தைக்கு அந்தந்த மருத்துவமனைகளிலேயே தங்க மோதிரம் வழங்கப்படும். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**